செ.வெ.எண்: 39/2021 நாள்:.22.07.2021

## செய்தி வெளியீடு

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான ஆணைக்கிணங்க, மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் உடுமலைப்பேட்டையில் கட்டப்பட்டு வரும் கால்நடை மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம் , பண்ணைக்கிணறு ஊராட்சியில் ரூ.82.13 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் கட்டுமானப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இஆப, அவர்கள் தலைமையில், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் இன்று (22.07.2021) பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

***மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தெரிவித்தாவது:***

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான ஆணைக்கிணங்க, தமிழக கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் 40.92 ஏக்கர் பரப்பளவில் ரூ.82.13 கோடி மதிப்பீட்டில் உடுமலைப்பேட்டை வட்டம் ,பண்ணைக்கிணறு ஊராட்சியில் அமையவுள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது. கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு பண்ணைக்கிணறு ஊராட்சியில் 2 கட்டிடங்களும் (27 ஏக்கர் மற்றும் 11.84 ஏக்கர்) பரப்பளவிலும், பெதப்பம்பட்டி ஊராட்சியில் (2.08 ஏக்கர்) பரப்பளவிலும் என மொத்தம் 40.92 ஏக்கர் பரப்பளவில் 8 தொகுதிகள் (block) வுடன் அமையவுள்ளது. ஒவ்வொரு தொகுதியிலும் (block) தரைத்தளம் மற்றும் முதல் தளம் என 2 தளங்களுடன் கட்டப்படவுள்ளது. மேலும், இவ்வளாகத்தில், கால்நடை உற்பத்தி பொருட்கள் தொழில்நுட்ப பிரிவு, கால்நடை பிரேதபரிசோதனை கூடம், மாணவ, மாணவியர்களுக்கு தனித்தனி விடுதிகள், கேண்டீன், கால்நடை மருத்துவமனை வளாகம் மற்றும் ஒருங்கிணைந்த கால்நடை பண்ணை வளாக கட்டுமானப்பணிகள்

நடைபெற்று வருகிறது. கட்டுமானப்பணிகள் அனைத்தும் வருகின்ற 2022 ஆண்டு இறுதிக்குள் முடிவடையும். தற்பொழுது கால்நடை மருத்துவபடிப்புக்கான முதலாம் ஆண்டு வகுப்புகள் ஆர்.கே.ஆர்.பள்ளி வளாகத்தில் தற்காலிகமாக நடைபெறவுள்ளது. அடுத்த ஆண்டு முதல் புதிய மருத்துவக்கல்லூரியில் மருத்துவபடிப்புக்கான வகுப்புகள் செயல்படுமென மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, திருப்பூர் வடக்கு வட்டம் ,அணைப்பாளையம் பகுதியில் நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் கட்டப்பட்டு வரும் பாலத்தினையும், மன்னரை முதல் தொட்டிமன்னரை வரை கட்டப்படு வரும் இரயில்வே மேம்பால பணிகளையும், திருப்பூர் முதல் வாவிபாளையம் வரை கட்டப்பட்டு வரும் இரயில்வே மேம்பால பணிகளையும் மற்றும் திருப்பூர் டவுன்ஹால் பகுதியல் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் ரூ.52.00 கோடி மதிப்பீட்டில் நவீன முறையில் கட்டப்பட்டு வரும் கூட்டரங்கினையும், ரூ.29.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் பன்னடுக்கு வாகன நிறுத்துமிட கட்டுமானப்பணிகளையும், எம்.ஜி.ஆர்.சிலை அருகே அமையவுள்ள சுரங்க பாதையினையும், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் பார்வையிட்டு கட்டுமானப்பணிகளை விரைவாகவும், தரமாகவும் முடித்திட அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார். மேலும், டவுன்ஹால் இடத்தை அரசுக்கு தானாமாக வழங்கியவரின் பெயரை சூட்டுவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்படுமென மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது, திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.க.செல்வராஜ், மாநகராட்சி ஆணையாளர் திரு.கிரந்தி குமார் பாடி இ.ஆ.ப., அவ்ாகள், நெடுஞ்சாலைத்துறை பொறியாளர்கள் மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**